


# சிரிப்பதற்காக சென்னை கூடும் இடம்

## ஹியூமர் கிளப் இன்டர்நேஷனல் திருவல்லிக்கேணி கிளை

சுபாஷிணி கோமேஸ்வரன்




ஒரு மருத்துவர், ஒரு வழக்கறிஞர், ஒரு பொறியாளர், ஒரு ஆசிரியர் மற்றும் ஒரு ஓய்வுபெற்ற வங்கியாளர் ஆகியோர் ஓர் அறைக்குள் நுழைகிறார்கள். இல்லை, இது ஒரு நகைச்சுவையின் ஆரம்பம் அல்ல. ஒரு வழக்கமான ஞாயிற்றுக்கிழமை மாலைப் பொழுதில் திருவல்லிக்கேணி கிளையின் ஹியூமர் கிளப் இன்டர்நேஷனலில், முன்பின் தெரியாதவர்கள் அவரவர் தன் வயதை மறந்து, தாம் செய்யும் தொழில்களை மறந்து, நண்பர்களாகப் பிரிகிறார்கள் - எளியது ஆனால் சக்தி வாய்ந்ததுமான சிரிப்பு என்ற ஒன்றால் அவர்கள் ஒன்றுபடுகிறார்கள்.

நாற்பது வருடங்களுக்கும் மேலாக, இந்த சென்னை அமைப்பு, நகைச்சுவை என்பது வெறும் பொழுதுபோக்கை விட மேலானது என்பதை அமைதியாக நிரூபித்து வருகிறது. நகைச்சுவை என்பது மருந்துச் சீட்டுகள் இல்லாத ஒரு சிகிச்சை, தடை இல்லாமல் பழகக்கூடிய, கிடைக்கக்கூடிய நண்பர்கள் சமூகம், ஆர்ப்பாட்டம் இல்லாமல் செய்யும் சேவை ஆகும்.

1983-ல் வெறும் பதினைந்து உறுப்பினர்களுடன் தொடங்கப்பட்ட இந்தக் கழகம், இன்று சென்னை மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் 2,500-க்கும் மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. இருப்பினும், இந்த எண்ணிக்கை கழகத்தின் சிறப்பை சிறிது தான் விளக்குகிறது. நகைச்சுவையை ஒரு வாழ்க்கை முறையாக மாற்றுவதற்கான ஓர் இடத்தை உருவாக்குவதில் தான், உண்மையான சாதனை அடங்கியுள்ளது.

சென்னையின் சாம்பியன்ஸ்களான செயலாளர் ஆர்.சேகரன், துணைத் தலைவர் எஸ்.பி.வெங்கடேஷ் மற்றும் பொருளாளர் பி.கண்ணன் ஆகியோருடன் பேசிய போது, ஒரு சிறிய குழுவை சென்னையின் நீண்டகால சமூக இயக்கமாக மாற்றிய அவர்களின் பயணம் பிரதிபலித்தது.

ஒய்.எம்.என்.மூர்த்தி அவர்களால் பெங்களூரில் தொடங்கப்பட்ட நகைச்சுவை கிளப்பால் ஈர்க்கப்பட்டு, 1978ல் மண்ணடியில் கோவிந்தராஜுலுவால் அதைப் போன்றே கிளப் தொடங்கப்பட்டது. சௌகார்பேட்டையின் பரபரப்பான வணிக மையத்தில் அமைந்திருந்த இந்த கிளப் வளர போராடியது. வணிக வேலைகளுக்காக ஓடிக் கொண்டிருந்த வணிகர்களுக்கு மாலை நேர நகைச்சுவைக்கு சிறிது உட்காரக் கூட நேரம் இல்லை.

இசையை ரசிக்க சரியான ரசிகர்கள் இருப்பது போல, நகைச்சுவையை ரசிக்கவும் ஏற்றவர்கள் தேவை என்பதை உணர்ந்து, அமைப்பாளர்கள் கிளப்பை மயிலாப்பூருக்கு மாற்றினார்கள். இது சரியான முடிவே ஆகும். அதற்கு அடுத்து உடனே, டிரிப்ளிகேன் கிளப் பிறந்தது, பின், ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இன்று அடையாளம் காணும் அமைப்பாக வளர்ந்து உள்ளது. அந்த வளர்ச்சியின் பெரும்பகுதி இயற்கையாகவே நடந்துள்ளது. உறுப்பினர்கள் சேர்ப்பதற்கான முயற்சியோ, அல்லது விரிவான விளம்பர பிரச்சாரங்களோ எதுவும் இல்லை. ஒருமுறை கலந்துகொண்ட ஒருவர், அவர்களுக்கு தெரிந்தவர்களும் அனுபவிக்க வேண்டும் என்று வலியுறுத்துவதால் புதியவர்கள் வருகிறார்கள். பக்கத்து வீட்டுக்காரர் அவருக்கு பக்கத்து வீட்டாரை அழைத்து வருகிறார். குழந்தைகள் பெற்றோருடன் செல்கிறார்கள். நண்பர்கள் சக ஊழியர்களை அறிமுகப்படுத்துகிறார்கள். குடும்பங்கள் மாதாமாதம் மீண்டும் வருகிறார்கள்.

ஒருவர் மூலம் மற்றொருவருக்கு வாய்வழியே தெரிவதே, கிளப்பின் வலுவான விளம்பரமாக மாறியுள்ளது.

கிசுகிசு, பரபரப்பு அல்லது சர்ச்சைகளை சாராமல், நம் சாதாரண வாழ்க்கையில் மறைந்திருக்கும் நகைச்சுவையை கிளப் கொண்டாடுகிறது. திருமணம், பெற்றோர், பணியிடத்தில் நடக்கும் தவறுகள், அக்கம் பக்கத்தினர், பயண விபத்துகள், தலைமுறைகளுக்கு இடையேயான தவறான புரிதல்கள் மற்றும் அன்றாட மனித வினோதங்கள் ஆகியவை ரசிகர்கள் உடனடியாக அங்கீகரிக்கும்படியான நகைச்சுவைக்கான கதைகளானது. ஒவ்வொரு கதையிலும் ஒவ்வொருவரும் தங்களைக் கொஞ்சம் பார்க்கிறார்கள்.

எனவே, சிரிப்பு ஒருபோதும் கட்டாயப்படுத்தப்படுவதில்லை. அது இயற்கையாகவே வருவதும், அனைவரும் அதை கேட்டு ரசிப்பதும் என இனிய தருணங்கள் பிரதிபலித்தது. ஒவ்வொரு நகைச்சுவைக்குள்ளும் உறவுகள், இரக்கம், முதுமை அல்லது குடும்ப வாழ்க்கை ஆகியவை அடங்கி உள்ளது. பார்வையாளர்கள் சிரிப்பது, ஏதோ வேடிக்கையாக இருப்பதால் மட்டும் இல்லை, அது உண்மையாக இருப்பதால் தான். ஏற்பாட்டாளர்கள் இதை "தரமான நகைச்சுவை" என்று அழைக்கிறார்கள். தனி நபர்களையோ சமூகத்தையோ இழிவுபடுத்துவது, அரசியல் நையாண்டி, நாகரிகமற்றவை போன்ற நகைச்சுவைக்கு இங்கு இடமில்லை. நகைச்சுவை, காயப்படுத்துவதை விட சந்தோஷப்படுத்த வேண்டும் என்று அவர்கள் நம்புகிறார்கள். அதனால் தான் பார்வையாளர்கள் தலைமுறை தலைமுறையாக இருக்கிறார்கள் என்பது தெரிகிறது.. முதல் முறையாக வரும் பார்வையாளர்கள், அவர்களை கவர்ந்திழுக்க ஆடம்பரமான மேடை, பொழுதுபோக்கு வித்தைகள் மற்றும் சிற்றுண்டிகள் ஏதும் இல்லை என்பதை கவனிக்க தவறவில்லை. மாறாக, அவர்கள் வரும்போது மெல்லிசைகளே ஆடிட்டோரியம் முழுவதும் நிலவியது.

வந்தவர்களில் பலர் மூத்த குடிமக்கள். நிகழ்ச்சி தொடங்குவதற்கு முன்பே, ஏதோ பொது நிகழ்வு போல் இல்லாமல், ஒரு குடும்பம் கூடுவதைப் போல் ஒரு சூழ்நிலையை உணர்கின்றனர். வரும் அனைவரும் ஒரு குடும்பமாகவே நடத்தப்படுகிறார்கள்.

மயிலாப்பூர் ஃபைன் ஆர்ட்ஸ் கிளப்பில் மாதந்தோறும் நடக்கும் நிகழ்ச்சிகள் கிட்டத்தட்ட 800 பேரை ஈர்க்கின்றன. சிறப்பு நிகழ்வுகளுக்கு வருபவர்கள் 1,100-ஐத் தாண்டும், அதே சமயம் செயின்ட் பீட்ஸ் ஆங்கிலோ இந்தியன் பள்ளியின் நூற்றாண்டு விழா ஆடிட்டோரியத்தில் வருடந்தோறும் நடக்கும் விழாவில் 2,500 பார்வையாளர்களுக்கு மேல் இருப்பார்கள். மக்கள், ஒரு நல்ல அனுபவத்திற்காகவும், தோழமைக்காகவும் மட்டுமின்றி, இங்கு வந்து போனால் மனம் இலகுவாகும் என்பதற்கே வருகிறார்கள்.

ஒழுக்கமும், கிளப்பின் அடையாளமாக இருந்தது. ஒவ்வொரு நிகழ்ச்சியும் சரியான நேரத்தில் தொடங்கி, சொன்னது போல் சரியான நேரத்தில் முடியும் என்று பார்வையாளர்கள் நம்பினர்.

ஒவ்வொரு நகைச்சுவையும் மதிப்பிடப்படுகிறது. சமூக ஊடகங்களில் உலவி வரும் நகைச்சுவைகளுக்குப் பதிலாக, பங்கேற்பாளர்கள் தங்கள் சொந்த விஷயங்களை வழங்க ஊக்குவிக்கப்படுகிறார்கள். ஒரு நகைச்சுவை சரியாக பார்வையாளர்களிடம் சேரா விட்டால், அமைப்பாளர்கள் அவர்களின் அனுபவத்தில் அந்த சூழலை மிக அழகாக கையாண்டு இனிமையாக்கி விடுவார்கள்

பல ஆண்டுகளாக, மேடை இலக்கியம், சினிமா, நாடகம், கல்வி, சட்டம், பொது நிர்வாகம் மற்றும் வணிகம் ஆகியவற்றிலிருந்து மிகச் சிறந்த ஆளுமைகளை வரவேற்றுள்ளது. பாரதி பாஸ்கர், சுகி சிவம் மற்றும் மோகன சுந்தரம் உள்ளிட்ட புகழ்பெற்ற பேச்சாளர்கள் புகழ்பெற்ற எழுத்தாளர்கள், ஆசிரியர்கள், நீதிபதிகள், நிர்வாகிகள் மற்றும் கலைஞர்களுடன் மேடையைப் பகிர்ந்து கொண்டுள்ளனர்.

சேகரனின் பேச்சைக் கேட்டுக்கொண்டிருக்கும் போதே, அவர் ஏன் கிளப்பின் மிகப்பெரிய ஈர்ப்புகளில் ஒருவராக இருக்கிறார் என்பது மிகத் தெளிவாக தெரிகிறது. அவரின் கதைகள், சரியான நேரத்தில் தெறிக்கும் நகைச்சுவை, மிக இயல்பாக சொல்லும் நகைச்சுவை, மற்றும் வாழ்க்கையில் நடக்கும் சாதாரண நிகழ்வுகளில் இருக்கும் நகைச்சுவையைக் கண்டறியும் அசாத்திய திறமை ஆகியவற்றுடன் வெளிவருகின்றன.

அப்படிப்பட்ட ஒரு கதை கோவிட்-19 தொற்றுநோய் காலத்தில் நடந்தது. வைரஸால் பாதிக்கப்பட்ட பிறகு தனது வீட்டில் அடைந்திருந்த அவர், இந்த நோய் எதிர்பாராத ஒரு அனுகூலத்தைத் தந்தது என்று சிரித்துக் கொண்டே சொன்னார். பல வருடங்களில் முதன்முறையாக, அவரது மனைவி சரியான நேரத்தில் உணவு அளித்தது, பிற கணவர்கள் கனவில் மட்டுமே காண முடியும் என்று நகைச்சுவையாக சொன்னார். பார்வையாளர்கள் சிரித்தனர்.

ஆனால் அந்த நகைச்சுவைக்குப் பின்னால் மற்றொரு உண்மை மறைந்திருந்தது. அவரது மனைவி விஜயா சேகரன், ஒவ்வொரு நிகழ்ச்சியும் தடையின்றி நடைபெறுவதை உறுதிசெய்வதும், அனைத்தையும் ஒருங்கிணைத்து செயல்படுதல், திட்டமிடல் என்று எண்ணற்ற பொறுப்புகளைக் கையாண்டு, நீண்ட காலமாக அந்த அமைப்பின் தூண்களில் ஒருவராக இருந்து வருகிறார். தன் கணவரின் பெரும்பாலான நகைச்சுவைக்கு அவரே இலக்காக இருப்பினும், அவரது பங்களிப்பு சக தன்னார்வலர்கள் மற்றும் பார்வையாளர்களால் வெகுவாக பாராட்டப்பட்டு அங்கீகரிக்கப்படுகிறது.

இந்தப் கோவிட் பெருந்தொற்று, அந்த அமைப்பின் மற்றொரு பக்கத்தையும் வெளிப்படுத்தியது. மூத்த குடிமக்கள் தனிமையால் பெரும் சிரமப்பட்ட போது, பொருளாளர் பி.கண்ணன் ஒரு சிறந்த திட்டத்தைத் தொடங்கினார். கிளப் உறுப்பினர்கள், அவர்களை தொலைபேசியில் அழைத்து, கூட்டங்களோ அல்லது உறுப்பினர் சேர்க்கைகள் பற்றியோ பேசாமல், அவர்கள் எப்படி இருக்கிறார்கள் என்று தவறாமல் விசாரித்தனர். சில சமயங்களில், ஒரு சிறு உரையாடல் மட்டுமே ஒருவருக்குத் தேவைப்பட்டது.

கோவிட் தாக்குதலால் அரங்கங்கள் காலியாக இருந்தபோதும், வீடுகளுக்குச் நகைச்சுவை தொடர்ந்து சென்றடைய வேண்டும் என்பதற்காக, நகைச்சுவை நிகழ்ச்சிகளின் தொகுக்கப்பட்ட பதிவுகள் இணையத்தில் பகிரப்பட்டன. ஒரு தற்காலிக தேவைக்காக தொடங்கப்பட்ட இந்த வேலை, படிப்படியாக டிஜிட்டல் தளத்தில் பிரம்மாண்டமாக உருவெடுத்தது. இன்று, இந்த அமைப்பின் யூடியூப் சேனல் 320,000-க்கும் மேற்பட்ட சந்தாதாரர்களையும், உலகெங்கிலும் உள்ள பார்வையாளர்களிடமிருந்து மில்லியன் கணக்கில் பார்வைகளையும் பெற்றுள்ளது. ஃபேஸ்புக் மற்றும் இன்ஸ்டாகிராம் அதன் பரவலை மேலும் விரிவுபடுத்தியுள்ளன, அதே நேரத்தில் சர்வதேசப் பதிவு, சென்னைக்கு அப்பால் உள்ள உறுப்பினர்களுடன் இணைய வழிவகுத்துள்ளது.

டிஜிட்டல் தளத்தில் இவ்வளவு வளர்ச்சி இருந்தபோதிலும், கிளப் மக்களுக்கான சேவையில் உறுதியாக வேரூன்றியுள்ளது. ஒவ்வொரு ஆண்டும், தகுதியான மாணவர்கள் கல்விக்கான நிதியுதவிகளைப் பெறுகிறார்கள். ராணுவக் குடும்பங்களுக்கு நிதியுதவி சென்றடைகிறது. ஏறக்குறைய 180 பொருளாதார ரீதியாக நலிந்த குடும்பங்கள் மாதாந்திர மளிகைப் பொருட்கள் விநியோகத்தால் பயனடைகின்றனர். ஆசிரியர்கள் மற்றும் மாநகராட்சி ஊழியர்களின் சமூகத்திற்கு ஆற்றும் பாராட்டப்படாத பங்களிப்புகள், அங்கீகரிக்கப்படுகின்றன.

இந்த அமைப்பு வாழ்க்கையின் முக்கிய மைல்கல் நிகழ்வுகளையும் மிகுந்த அன்போடும் நெகிழ்ச்சியோடும் கொண்டாடி வருகிறது. காலங்கள் தாண்டி நிலைத்திருக்கும் திருமண பந்தங்களைக் கௌரவிக்கும் வகையில், ஐம்பத்தோரு தம்பதியினருக்குச் ‘சதாபிஷேகம்’ மற்றும் நூற்றிநாற்பது தம்பதியினருக்குச் ‘சஷ்டியப்த பூர்த்தி’ விழாக்களை ஏற்பாடு செய்துள்ளது.

இந்த அமைப்பு நடத்தும் நிகழ்ச்சிகளில், மிகச் சிறப்பான மற்றும் மனதிற்கு நெருக்கமான ஒரு நிகழ்ச்சி ‘மனைவிக்கு மரியாதை’ ஆகும்; இதில், நான்கு அல்லது ஐந்து தசாப்தங்களாகத் திருமண வாழ்க்கையைத் தொடரும் கணவர்கள், தங்கள் மனைவிகளுக்குத் தங்கள் நன்றியை எல்லோர் முன்னிலையிலும் வெளிப்படுத்துகிறார்கள். பாராட்டுக்களை விட விமர்சனங்கள்/கிண்டல்கள் அதிகம் நிலவி இருக்கும் இந்த காலத்தில், இந்நிகழ்ச்சியானது தம்பதியினரிடையே தோழமை, மரியாதை மற்றும் நிலையான அன்பு ஆகியவற்றின் நெகிழ்ச்சியான கொண்டாட்டமாகத் திகழ்கிறது.




ஆச்சி மனோரமா, கே.பாலச்சந்தர் மற்றும் தென்கச்சி கோ.சுவாமிநாதன் ஆகியோரின் நினைவாக நிறுவப்பட்ட ‘வாழ்நாள் சாதனையாளர் விருதுகள்’, பொது வாழ்வையும், கலாச்சாரத்தையும் தங்கள் பணிகளால் செழுமைப்படுத்திய தனிநபர்களைத் தொடர்ந்து கௌரவித்து வருகின்றன.

இருப்பினும், அனைத்து வெற்றிகளுக்கு நடுவிலும், ஒரு முக்கியமான விஷயத்தில் தலைமைத்துவம் மிகுந்த விழிப்புணர்வுடன் உள்ளது. பல தசாப்தங்களாக இந்த அமைப்பை வளர்த்தெடுத்தவர்களில் பெரும்பாலோர் இப்போது அறுபது மற்றும் எழுபது வயதுகளில் உள்ளனர். பங்கேற்பாளர்களின் வருகை சிறப்பாகவும், ஆர்வம் குறையாமல் இருந்தாலும், அவர்கள் இப்போது எதிர்பார்ப்பது கைதட்டல்களை அல்ல; மாறாக, அடுத்த தலைமுறைப் பொறுப்பு ஏற்றுக்கொள்வதையே அவர்கள் நாடுகிறார்கள். இன்றைய இளைய தலைமுறையினர், கிளப் உறுப்பினர்களாக இருப்பதைத் தாண்டி, தாராள மனப்பான்மை, ஒழுக்கம் மற்றும் சந்தோஷம் ஆகியவற்றின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட இந்த மரபை முன்னெடுத்துச் செல்லும் தன்னார்வலர்களாகவும், ஒருங்கிணைப்பாளர்களாகவும், எதிர்காலக் காப்பாளர்களாகவும் மாற வேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள்.

நகைச்சுவை என்பது மக்களைச் சிரிக்க வைப்பது மட்டுமல்ல; அது மக்கள் தங்களின் தனிமையை உணராமல் இருக்கச் செய்வதும் கூட என்று அவர்கள் நம்புகிறார்கள். கடினமான காலக்கெடு, போக்குவரத்து நெரிசல் என்று ஓடி கொண்டு, மகிழ்ச்சி இல்லாமல் மன அழுத்தத்தை மட்டுமே சந்திக்கும் ஒரு நகரத்தில், ஹியூமர் கிளப் இன்டர்நேஷனல், திருவல்லிக்கேணி கிளை, தொடர்ந்து அரிதான ஒரு விஷயத்தை வழங்கி வருகிறது—அதுதான் அந்தச் சில மணிநேரங்கள்; வேறுபாடுகள் மறைந்து, சுமைகள் இலகுவாகி, சவால்கள் இருந்தபோதிலும் வாழ்க்கை கொண்டாடத் தகுந்ததுதான் என்பதை நகைச்சுவை அனைவருக்கும் நினைவூட்டும் மணித்துளிகள்.

நாற்பத்திமூன்று ஆண்டுகளாக, காலத்தால் அழியாத ஒரு உண்மையை இந்த மகத்தான அமைப்பு நிரூபித்துள்ளது. எதையோ நோக்கி ஓடும் இந்த உலகில், ஹியூமர் கிளப் இன்டர்நேஷனல் நம்மைச் சற்று நிறுத்தி, சிரிக்க நினைவூட்டுகிறது. அன்றாட சலிப்பான வாழ்க்கையில், நகைச்சுவையைச் சேர்ப்பதன் மூலம், மகிழ்ச்சியான தருணங்கள் மட்டுமல்ல, மகிழ்ச்சியான மனிதர்களையும் வளர்க்கிறது. புன்னகை தொற்றக்கூடியவை, சிரிப்பு காந்தம் போன்றது; மேலும் இவ்விரண்டையும் நாம் உணர்ந்துக் கொள்ள உதவியவர்கள், அமைதியாக அன்பான இல்லங்களையும், வலுவான நட்புகளையும், கனிவான சமூகங்களையும் உருவாக்குகிறார்கள். சென்னைக்கு அந்த விலைமதிப்பற்ற பரிசை வழங்கியதற்காக, அவர்கள் உண்மையிலேயே நமது சென்னையின் சாம்பியன்ஸ் ஆவார்கள்.